**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 77 of 2020

Deposition of P.W.3

Name of the Witness: திரு. செல்வராஜ்

Date : 22.01.2026

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

***1, 3, 4, 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை***

என்னுடைய ஆதார் கார்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. எடுத்து வந்துள்ளேன். வாதி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. என் அப்பா உயிலில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளதை பற்றி மட்டும் தான் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கின் பிரதிவாதிகள் யார் என்னவென்று எனக்கு தெரியாது. என் அப்பாவிற்கு அடையாள அட்டை வழங்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. நான் எதுவும் தாக்கல் செய்யவில்லை. Ex.X3ல் அரசாங்க முத்திரை எதுவும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ2ல் உயிலில் என் அப்பா போட்டுள்ள சாட்சி கையெழுத்திற்கும் Ex.X3ல் உள்ள சாட்சி கையெழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. வாதி எனது உறவினர் இல்லை. வாதியின் நானும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள். என் அப்பாவின் கையெழுத்தே வா.சா.ஆ.2 உயிலில் இல்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 10ம் வகுப்பு படித்ததற்கான மாற்று சான்றிதழில் என் அப்பா கையெழுத்து போட்டிருப்பார். அது தண்ணீரில் நனைந்து விட்டது. இந்த வழக்கு விவரம் எதுவும் தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வாதி கேட்டு கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.